Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, APRIL 18, 2025

வெள்ளிக்கிழமை 18, ஏப்ரல் 2025 | ஒளி: 10 கதிர்: 201 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

### திரவ பால், யோகட் மீதான

## வற் நீக்கம்

பெறுமதி சேர்க்கப்பட்ட வரி திருத்தச் சட்டமூலத்தின்படி, உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் திரவப் பால் மற்றும் யோகட் ஆகியவை வற் (VAT) வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## “சட்டங்களை மீறும் அறிக்கைகள் வேண்டாம்”

தேர்தல் சட்டங்களை மீறும் அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு தேர்தல் ஆணைக்குழு, ஜனாதிபதியின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அளித்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து ஆணைக்குழு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

தொடர்ச்சி P2



# 400,000 குடும்பங்களுக்கு அஸ்வெசும

எஸ்.ஆர்.லெம்பேட்

எதிர்வரும் ஜூன் மாதம் முதல் மேலும் 400,000 குடும்பங்களுக்கு அஸ்வெசும நன்மையை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

மன்னார் பஜார் பகுதியில் வியாழக்கிழமை (17) அன்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மன்னாரில் இருந்து தமிழ்நாடு, இராமேஸ்வரத்திற்கான பயணிகள் படகுச் சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருகின்றது.

சுமார் 5-6 வருடங்களுக்குப் பின்னர், எம்மிடம் மிகப் பாரிய அளவிலான டொலர் கையிருப்பில் உள்ளது.

கடந்த 6 மாதங்களாக ரூபாவின் மதிப்பு சரியவில்லை. நாம் எரிபொருள் விலையைக் குறைத்தோம். மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நாங்கள் பாடுபடுகிறோம். அரசு ஊழியர்களின் சம்பளம் உயர்ந்துள்ளது.

அஸ்வெசும உதவித்தொகை அதிகரிக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல், அடுத்த ஜூன் மாதம் முதல் 400,000 புதிய குடும்பங்களுக்கு அஸ்வெசும வழங்கப்படும். இது மக்களைக் கவனித்துக் கொள்ளும் அரசாங்கமாகும்.

தொடர்ச்சி P2

### குட்டித் தேர்தலை

## ஒரே நாளில் நடத்த யோசனை

339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ஒரே நேரத்தில் நடத்த திட்டமிட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் சட்டப் பிரிவு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் ஏராளமான மனுக்கள் மற்றும் தீர்ப்புக்களை தேர்தல் ஆணைக்குழு தாமதித்தே பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## மூன்று நாட்களில் 18 பேர் பலி

2025 புத்தாண்டு கொண்டாட்டத்தின் மூன்று நாட்களில் (13, 14 மற்றும் 15) ஆம் திகதிகளில் வீதி விபத்துகள், கொலைகள் மற்றும் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தெஹியத்தகண்டிய, ஹல்தும்முல்ல, பதவிய, குச்சவெளி, காத்தான்குடி, பானம, மன்னம்பிட்டிய, பலாங்கொடை, சிலாவத்துறை, ஈச்சலம்பற்று, கொஸ்கம, அஹங்கம, தம்புள்ளை, நாரம்மல, அத்துருகிரிய, ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இந்தச் சம்பவங்கள் பதிவாகி வருவதாகவும் அந்தப் பிரிவு குறிப்பிடுகிறது.

தொடர்ச்சி P2

## 415,937 அஞ்சல் வாக்குச் சீட்டுகள் விநியோகம்

மே மாதம் 5ஆம் திகதி நடாத்தப்படவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகார சபைகள் தேர்தலுக்காக, ஏப்ரல் 7, 10 மற்றும் 15ஆம் திகதிகளில், 415,937 அஞ்சல் வாக்குச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2


## “போலி பதிவேடு விவகாரத்தை விசாரிக்க குழு”

வாகனங்களின் போலிப் பதிவேடு விவகாரம் குறித்து விசாரிக்க ஒரு குழு நியமிக்கப்படும் என்று போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

கோபா குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

குழுவின் பரிந்துரைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும், மோசடியில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் கூறினார்.

## 18 வேட்பாளர்களுக்கு எதிராக வழக்கு




தேர்தல் சட்டங்களை மீறிய சம்பவங்கள் தொடர்பாக 18 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்த நபர்கள் மார்ச் 3 ஆம் திகதி முதல் ஏப்ரல் 16 வரையான காலப்பகுதிக்குள் வைத்து கைது செய்யப்பட்டனர்.

அதே காலக்கட்டத்தில் கட்சி ஆதரவாளர்கள் 62 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 14 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## இரு மாணவர்கள் கடலில் மாயம்



பாணந்துறை கடலில் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் நீந்தி மகிழ்ந்த பாடசாலை மாணவர்கள் இருவர், நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## “தமிழ் அரசியல் கட்சிகளை நிராகரிக்க வேண்டும்”



தமிழ்த் தேசிய அரசியலை வியாபாரமாக்கி மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் தமிழ் அரசியல் கட்சிகளையும் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “மக்களை ஏமாற்றும் திசைகாட்டி”

இன்று எமது நாட்டில் ஆட்சிக்கு வந்துள்ள ஜே.வி.பி. அரசாங்கம் மக்களை ஏமாற்றி, தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை மீறி நடந்து வருகிறது. ஒட்டுமொத்த 2.2 மில்லியன் மக்களையும் ஏமாற்றி வருவதை மக்கள் இன்று நன்கு உணர்ந்துள்ளனர். விவசாயப் பகுதிகளில் அடுத்த போகத்துக்குரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

என்றபோதிலும், உர மானியம் இதுவரை அவர்களுக்கு கிடைக்கவில்லை. பயிர் சேதங்களுக்கு இழப்பீடுகளோ கிடைக்கவில்லை.



தொடர்ச்சி P2



## காணிகள் விடுவிப்பு தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதம்

பு.கஜிந்தன்

வலி வடக்கு உயர்பாதுகாப்பு காணிகள் விடுவிப்பு தொடர்பாக வலி வடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையமானது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு கடிதம் ஒன்றினை எழுதியுள்ளது.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

1990ஆம் ஆண்டு முதல் 35 வருட காலமாக உயர்பாதுகாப்பு வலையம் என்னும் பெயரில் இலங்கை அரசினால் கையகப்படுத்தப்பட்டுள்ள வலி வடக்கில் கீரிமலை, காங்கேசந்துறை தையிட்டி ஊரணி, மயிலிட்டி, பலாலி, வயாவிளான், கட்டுவன், குரும்பசெட்டி, தோளக்கட்டி ஆகிய கிராமங்களில் மக்களின் காணிகளை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கூறப்பட்டதற்கு அமைய உடனடியாக காணிகளை விடுவிக்குமாறு வலிவடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையம் கோரிக்கை விடுக்கிறது.

யுத்தம் முடிந்து 15 ஆண்டு காலம் முடிவடைந்தும் ஐந்தாவது ஜனாதிபதி மாற்றமாகியும் நாளாவது பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டும் பல வாக்குறுதிகள் வழங்கியும் இதுவரை சுமார் 2900 ஏக்கர் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.

கடந்த 10ஆம் திகதி பலாலி வீதியின் ஒரு பகுதி நிபந்தனைகளுடன் பகல் நேரத்தில் மட்டும் திறந்து வைக்கப்பட்டதை வரவேற்கும் அதேநேரம் 2018ஆம் ஆண்டு நல்லாட்சி அரசின் ஆட்சியில் தேசிய பாதுகாப்பு குழுவின் அனுமதி பெறப்பட்ட காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி போன்ற கிராமங்களில் விடுவிக்கப்படவிருந்த சுமார் 500 ஏக்கர் காணிகளில் 50 ஏக்கர் காணிகள் மட்டுமே இதுவரை மக்களின் தேவைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## "சட்டங்களை மீறும் அறிக்கைகள் வேண்டாம்"

அரசு அதிகாரங்கள் இல்லாத உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்க மாட்டேன் என்று அரசியல் மேடைகளில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கூறியதாக இந்த அமைப்புகள் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளன.

## 415,937 அஞ்சல் வாக்குச் சீட்டுகள் விநியோகம்

இதனைத் தவிர, 2025.04.21ஆம் திகதி 112 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 232,558 அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்படவுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளது.

வாக்கெடுப்பு நடாத்தப்படுவதற்குரிய 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உரியவாறு அனைத்து வாக்காளர்களுக்கும் விநியோகிப்பதற்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் 2025.04.16ஆம் திகதி அஞ்சலகங்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் நாட்களில் அந்த வாக்காளர் அட்டைகள் வீடுகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது எனவும், 2025.04.29ஆம் திகதியன்று வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாவிடின், தமது வதிவிடத்திற்குரிய தமது வாக்கு பதிவு செய்யப்பட்டுள்ள பிரதேசத்திற்குரிய அஞ்சல் அலுவலகத்திற்குச் சென்று அது பற்றி விசாரிக்க முடியுமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரு மாணவர்கள் கடலில் மாயம்

காணாமல் போனவர்கள் 15 மற்றும் 16 வயதுடைய மொஹமட் இர்பான் மொஹமட் மஹ்மது மற்றும் யாசிர் அரபாத் அகமது என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் பண்டாரகம, அதுலுகம மற்றும் வத்தளை, ஹுனுபிட்டிய ஆகிய இடங்களில் வசிக்கின்றனர்.

காணாமல் போன இரண்டு பாடசாலை மாணவர்களைத் தேடும் பணிகளை பொலிஸாரும் கடற்படை உயிர்காப்பாளர்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

## "தமிழ் அரசியல் கட்சிகளை நிராகரிக்க வேண்டும்"

யாழ்ப்பாணம் வலி. வடக்கு பிரதேச சபைக்கு சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைக்கும் கூட்டம் புதன்கிழமை (16) அன்று மல்லாகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்,

ஜனாதிபதித் தேர்தலின்போதும் பாராளுமன்றத் தேர்தலின்போதும் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களில் கணிசமானோர் ஜே.வி.பி. என்னும் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கிறார்கள், தமிழ்த் தேசிய அரசியல் பயணத்தில் ஒரு பின்னடைவாக வடக்கு, கிழக்கில் ஜே.வி. பி. காலூன்றியமைக்கு எமது வாக்காளர்களைக் குற்றம் சாட்டுவது எவ்விதத்திலும் ஏற்புடையது அல்ல.

எங்கள் கைவிரல்களாலேயே எங்கள் கண்களைக் குத்துவது போன்று தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளே தென்னிலங்கைப் பேரினவாதக் கட்சிகளுக்குத் தமிழ் மக்களை வாக்களிக்கப் பழக்கினார்கள்.

முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுறுத்தப்பட்டவுடன் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் வரலாற்றுப் பிழையான முடிவை எடுத்தார்.

முள்ளிவாய்க்கால்வரை யுத்தத்தை முன்னின்று நடாத்திய சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்களை அவர் வாக்களிக்க வைத்தார். இதன் மூலம் போர்க்குற்றவாளி என்ற குற்றச்சாட்டிலிருந்து நாமே அவரை விடுதலை செய்தோம். இதன் விளைவாகவே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எப்போதுமே எதிரான நிலைப்பாடுகளை எடுத்து வந்த ஜே.வி.பிக்கு இன்று தமிழ் மக்கள் வாக்களிக்கத் தலைப்பட்டுள்ளார்கள்.

எம் மத்தியிலுள்ள பல தமிழ்க் கட்சிகள் உதட்டளவில் தமிழ்த் தேசியம் பேசுவனவாகவும் மனதளவில் பேரினவாதக் கட்சிகளை விசுவாசிப்பனவாகவுமே உள்ளன.

மதுபான விற்பனை அனுமதிப் பத்திரங்களை இலஞ்சமாகப் பெற்றும், பன்னாட்டு நிறுவனங்களிடம் பல கோடிகளைப் பெற்றும், மத்திய அரசின் பாதீடுகளை ஆதரித்தும் தமிழ்த் தேசிய விரோத நிலைப்பாடுகளை எடுப்பதற்கு இக்கட்சிகள் ஒருபோதும் தயங்கியதில்லை. தமிழ் மக்கள் இத்தேர்தலில் தென்னிலங்கைக் கட்சிகளோடு இப் போலித் தமிழ்த்தேசியக் கட்சிகளையும் சேர்த்தே நிராகரிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# 400,000 குடும்பங்களுக்கு அஸ்வெசும

அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் சீருடைகள் வழங்கப்படுகின்றன. 300 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு காலணிகள் வாங்க பணம் வழங்கப்படுகிறது.

1.6 மில்லியன் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்ய தலா ரூ.6,000 வழங்கினோம்.

அது மாத்திரமல்லாமல், 5-6 வருடங்களுக்கு பின்னர் தற்போது 30,000 பேரை அரச சேவையில் சேர்க்கவுள்ளோம்.

இதற்காக எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களுக்கு பின்னால் செல்ல வேண்டிய அவசியமில்லை. பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவோம், அதன்படி பரீட்சைக்கு தோற்றி அதிக புள்ளிகளைப் பெற்று வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அரச சேவையில் தமிழ் பேசுபவர்களின் பற்றாக்குறை உள்ளது. பொலிஸ் நிலையங்களிலும் இது காணப்படுகின்றது.

எனவே, 2,000 புதிய பொலிஸார் பணியமர்த்தப்படுவார்கள், தமிழ் தெரிந்த உங்கள் பிள்ளைகளை பொலிஸ் பணியில் இணைய செய்யுங்கள். இது ஒரு மரியாதைக்குரிய வேலையாகும். நம் நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் வேலை. மேலும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் பேசத் தெரிந்தவர்கள் அரச பணியில் சேர வேண்டும். இதன் மூலம் ஒன்றாக இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.

அத்துடன் வடக்கில் நடந்த போர் காரணமாக, மக்களின் நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்த வேண்டியிருந்தது. சில வீதிகள் மூடப்பட வேண்டியிருந்தது. தேசிய மக்கள் சக்தி இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்து அவற்றை விடுவித்துள்ளது.

மக்கள் தங்கள் பணிகளைச் சுதந்திரமாகச் செய்யக்கூடிய ஒரு நாட்டை உருவாக்குவோம் என அவர் இங்கு குறிப்பிட்டார்.

குறித்த கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், பாராளுமன்ற உறுப்பினர்களான மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், செல்லத்தம்பி திலகநாதன் மற்றும் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை வேட்பாளர்கள், மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகளின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## "மக்களை ஏமாற்றும் திசைகாட்டி"

யானை மனித மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் பயிர்கள், உடமைகள் மற்றும் உயிர் சேதங்களுக்கு இன்னும் இந்த அரசாங்கம் தீர்வு காணவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இம்முறை உரங்களின் விலையும் அதிகரித்து வரும் சூழ்நிலையில், விவசாயி தூக்கி விடுவோம், விவசாயிகளைப் பாதுகாப்போம், விவசாயியைக் கடவுளாகக் கருதுகிறோம் என்று கூறிய திசைகாட்டி தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியினர் ஒட்டுமொத்த விவசாய சமூகத்தினரையும் அழிக்கும் கொள்கையை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிமித்தம் பொலன்னறுவை தேர்தல் தொகுதியில் வியாழக்கிழமை (17) அன்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, இன்று மக்கள் வாழ முடியாத அளவுக்கு பொருட்களின் விலைகள் அதிகரித்து காணப்படுகின்றன. பொருட்களின் விலைகள் தாறுமாறாக அதிகரித்துள்ளன. பொது மக்களுக்கு ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளன. மூன்று வேளை உணவு கூட சாப்பிட முடியாத நிலையை நாடு எட்டியுள்ளது. அத்தியாவசிய உணவு மற்றும் பாடசாலை பொருட்களுக்கான VAT வரிகளும் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன. அரிசி, பால் மா, தேங்காய், உப்பு ஆகியவற்றின் விலைகளும் தாறுமாறாக அதிகரித்துள்ளன.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதி அவர்கள், திசைகாட்டிக்கு அதிகாரம் கிடைக்காத சபைகளுக்கு நிதி ஒதுக்க மாட்டோம் என கூறி மக்களை ஏமாற்றி வருகின்றார். பொய், ஏமாற்று அடிப்படையிலான அரசியலுக்கு அதிக ஆயுட்காலம் இல்லை. மின்கட்டணத்தை 33% குறைப்போம் என்று இந்த ஆளும் தரப்பினர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் கூறினர். மக்கள் எழுச்சியால் தான் 20% கூட மின்கட்டணம் குறைக்கப்பட்டன.

அரசாங்கம் தீர்மானம் எடுத்து இதனை நிறைவேற்றவில்லை. மக்களின் கருத்துக்களுக்கு ஏற்பே இது குறைக்கப்பட்டது. எஞ்சிய 13% குறைப்பை இந்த அரசாங்கம் விரைந்து எடுக்க வேண்டும். எரிபொருள் விலைகள் தொடர்பில் அரசாங்கம் இவ்வாறான கொள்கைகளை பின்பற்றி வருகிறது. புதிய அரசாங்கத்தில் மக்கள் கண்ட பயன் எதுவும் இல்லை. சுத்த பொய்களை கொண்டு மக்களை ஏமாற்றி வரும் இந்த அரசியலைக் கண்டு மக்கள் ஏமாந்து விடக் கூடாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

## காணிகள் விடுவிப்பு தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதம்

முக்கியமாக இந்த காணிகளை மக்கள் முழுமையாக அனுபவிக்க முடியாத நிலையில் இராணுவ கெடுபிடிகள் தொடர்ந்தும் நீடிக்கின்றன.

தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அனைவரும் சமமாகவும் சமத்துவமாகவும் நடத்தப்படும் புதியதோர் இலங்கையை உருவாக்குவதாக வாக்குறுதி அளித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்து 6 மாதங்கள் ஆகியும் பாராளுமன்றத் தேர்தல் முடிந்து 5 மாதம் கழிந்தும் புதிதாக காணிகள் விடுவிக்கப்படவில்லை. மக்களின் துன்பத்தினை தமது அரசியலுக்கு தேசிய மக்கள் சக்தி பயன்படுத்தாது என்று கூறியிருந்தாலும் இனவாதமற்ற அரசியலை ஏற்படுத்துவதாக வாக்குறுதி அளித்திருந்தாலும் சிங்கள மக்கள் கூட ஆதரிக்கும் பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதில் ஏன் தாமதம்?

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் மே 6ஆம் திகதி நடப்பதற்கு முன் வடக்கு மக்களின் வாக்குகளை பெற்ற நீங்களும், உங்களது அரசும் உயர்பாதுகாப்பு வலையத்தில் இருக்கும். மக்களுக்கு காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றோம் என கூறப்பட்டுள்ளது.

## வற் நீக்கம்

அதன்படி, கடந்த 11ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் திரவ பால் மற்றும் தயிர் மீதான வற் வரி நீக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

வற் வரி திருத்த சட்டமூலம் கடந்த ஏப்ரல் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன ஏப்ரல் 11ஆம் திகதி கையொப்பமிட்டதற்கு அமைய குறித்த சட்டம் அன்றைய திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

அந்த வகையிலேயே உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பல்வேறு வரித் திருத்தங்களைச் செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

புதிய வரி திருத்தத்திற்கு அமைவாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மின்சார உற்பத்திக்காக இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படும் நப்தா எண்ணெய் மீதான வற் வரியும் இதன்படி நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒக்டோபர் 01ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், வெளிநாட்டிலிருந்து தனிநபர்கள் இலங்கைக்கு வழங்கும் டிஜிட்டல் சேவைகளுக்கு VAT வரி அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வணிக நோக்கங்களுக்காக பொருட்களை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்கின்ற அனைத்து நபர்களும் தங்களது வருமானம் மற்றும் விலக்களிப்புகளை கருத்தில் கொள்ளாது பெறுமதி சேர் வரி (VAT) திருத்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## ஒரே நாளில் நடத்த யோசனை

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களும் மனுக்கள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகளின் நகல்களை சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு கேட்டுக்கொள்கிறது.

இந்த முடிவுகளை ஆய்வு செய்து எதிர்கால நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யும் என்று தேர்தல் ஆணைக்குழு கூறுகிறது.

தேர்தல் திகதிகளை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்று செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார். மே 6 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 3 நாட்களில் 18 பேர் பலி

தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரகஸ்வெவவில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர், கிராந்துருகோட்டையில் வசிக்கும், மாநில புலனாய்வு சேவை தலைமையகத்தில் இணைக்கப்பட்ட 29 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஆவார்.

இறந்த கான்ஸ்டபிள் பல நண்பர்களுடன் நீந்திக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி இறந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வெல்லவாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரணவராவ சந்தியில் உள்ள பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் கடந்த 14 ஆம் தேதி ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

உயிரிழந்தவர் வெல்லவாய, ரன்தெனிய பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவர் ஆவார்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில், இறந்தவருக்கும் மற்றொரு நபருக்கும் இடையே இருந்த பழைய தகராறு காரணமாக இந்தக் கொலை நடந்திருப்பது தெரியவந்துள்ளது.

மனம்பிட்டிய, திம்புலாகல பகுதியில் வீதியோரத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி மோதியதில் ஏற்பட்ட விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் இறந்தவர் மஹெளல்பதாவின் காஷ்யபபுராவைச் சேர்ந்த 81 வயது பெண்மணி ஆவார்.

பலாங்கொடை, ருக்மல்கந்துர பகுதியில், வீட்டை விட்டு வெளியேற பின்னோக்கிச் செல்லும் போது, வீட்டின் முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்த லொறியின் இடது பின்புற சக்கரத்தின் கீழ் நசுங்கி 1 வயது மற்றும் 7 மாத குழந்தை உயிரிழந்துள்ளது. இறந்த குழந்தை லாரி ஓட்டுநரின் மகன் ஆவார்.

ஹல்துமுல்ல களுபஹன பிரதேசத்தில் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் புஸ்ஸெல்ல, களுபஹான பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞர் ஆவார்.

பதவிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிஹிந்து மாவத்தை கால்வாயில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். பராக்கிரம புரத்தைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவர் (15 ஆம் திகதி) காலை உயிரிழந்தார் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

## வழுக்கும் மரத்திலிருந்து வழுக்கி விழுந்து சிறுவன் பலி



தமிழ்-சிங்கள புத்தாண்டு கொண்டாட்டத்திற்குத் தயாராகிக் கொண்டிருந்த போது, சுமார் 40 அடி உயரமான வழுக்கும் (கிறீஸ்) மரத்தில் இருந்து வழுக்கி விழுந்ததில் 16 வயதான சிறுவன் உயிரிழந்த சம்பவம், பிடிகல பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

பிடிகல பொலிஸ் பிரிவின் அமுகொட பகுதியில் உள்ள ஒரு விளையாட்டு மைதானத்தில் வியாழக்கிழமை (17) நடைபெறவிருந்த புத்தாண்டு விழாவிற்காக ஒரு குழு வழுக்கும் மரத்தை தயார் செய்து கொண்டிருந்தபோது, ஒரு சிறுவன் வழுக்கும் மரத்தில் ஏறும்போது விழுந்து எல்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்துள்ளார்.

உயிரிழந்தவர் தெனியாவத்தை, அமுகொட பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுவன் ஆவார். சடலம் எல்பிட்டிய மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## மன்னார்-இராமேஸ்வரம் இடையே படகு சேவை



மன்னார் மற்றும் இராமேஸ்வரம் இடையே படகு சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அன்று தெரிவித்தார்.

மன்னார் பஜார் பகுதியில் வியாழக்கிழமை (17) காலை இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மன்னாரில் இருந்து தமிழ்நாடு, இராமேஸ்வரத்திற்கான பயணிகள் படகுச் சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருகின்றது.

மேலும் மன்னாரில் காற்றைக்கொண்டு மின் உற்பத்தி செய்யக்கூடிய வசதிகள் அதிகமாக காணப்படுகிறது.

ஆனால், கடந்த காலங்களில் சூழல் பாதுகாப்பை கருத்தில் கொள்ளாமல் குறித்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், குறித்த திட்டங்கள் அனைத்தும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் மக்களின் கருத்துக்களை அறிந்து கொண்டு,சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில்,குறித்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.




# 7ஆவது ஆண்டு பட்டமளிப்பு விழா

இலங்கையில் Gatehouse விருதுகள் (UK) இன் 7ஆவது ஆண்டு பட்டமளிப்பு விழா கடந்த சனிக்கிழமை (12) அன்று பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) பிரமாண்டமாக நடைபெற்றது.

UK இன் Gatehouse விருதின் இலங்கை இயக்குநரும் ccas கல்லூரியின் நிறுவுனரும் ஆகிய நஜிமுதீன் சைனுலாப்தீன் இந்நிகழ்வை ஏற்பாடு செய்து தலைமை தாங்கியிருந்தார்

இந்நிகழ்வில் நாடு முழுவதிலும் உள்ள பயிற்சி நிலையங்கள் மூலம் ஆரம்பகால குழந்தைப் பருவக் கல்வி,செவிலியர், தகவல் தொழில்நுட்பம், வணிக மேலாண்மை, ஆசிரியர் பயிற்சி, அளவு கணக்கெடுப்பு, சிவில் பொறியியல், பராமரிப்பு என பல துறை சார்ந்து கல்வி பயின்ற சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர்

பிரதம விருந்தினராக மாலத்தீவு குடியரசைச் சேர்ந்த ஆராய்ச்சியாளரும் மூத்த கல்வியாளருமான வைத்தியர் மஹ்தி ஷாஹித், கலந்துகொண்டதுடன் தலைமை விருந்தினராக மாத்தறை மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் நலின் ஜெயமினி, மலேசியாவின் உயர் ஸ்தானிகர் முகமது டுமிங் கலந்து கொண்டனர். கௌரவ விருந்தினர்களாக வைத்தியர் முகமது ரபிக் (இந்தியா), தொழில் ஆலோசனை நிபுணர் சன்ஃபோ குளோபலின், இயக்குநர் ஜெனரல் வைத்தியர் சர் தேசப்பிரியா, எஸ்.விஜேதுங்கே ஆகியோரும் இலங்கை ரூபவாஹினி கார்ப்பரேஷனின் செய்தி மற்றும் நடப்பு விவகாரங்களுக்கான துணை இயக்குநர் யாகூப் உமர்லெப்பே மற்றும் ஜேஜே அறக்கட்டளையின் இயக்குநர் ஐ.வை.எம்.ஹனிஃப் போன்ற சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டனர்

இந்த நிகழ்வு கல்வியின் சிறப்பு, தலைமைத்துவம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கு ஒரு சக்திவாய்ந்த சான்றாக அமையும் பட்டதாரிகளுக்கு ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகவும், உலகளாவிய கல்வியில் இலங்கையின் முன்னேற்றத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாகவும் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஊடக சந்திப்புக்கு வந்தவர்களை

# அச்சுறுத்திய பொலிஸார்

■ நிதர்ஷன் வினோத்

காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை வைப்பதற்கான ஊடக சந்திப்புக்கு வந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்ட சம்பவமொன்று வியாழக்கிழமை (17) அன்று யாழில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பாக வலி வடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் வசாவிளான் சந்தியில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.



ஊடகவியலாளர் சந்திப்பு ஆரம்பிப்பதற்கு முன்னதாக அங்கு வந்த பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது உயர் பாதுகாப்பு வலயம் எனவும் இங்கு கூட்டம் கூட முடியாது எனவும் ஊடக சந்திப்பு ஏற்பாட்டாளர்களுடன் பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

தாம் எமது காணிகள் விடுவிப்பை வலியுறுத்தி ஊடக சந்திப்பை நடத்தவே தாம் வந்ததாகவும் போராட்டத்தில் ஈடுபடவில்லை என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, அங்கு ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களின் தேசிய அடையாள அட்டையை வாங்கி பெயர்களைப் பதிவு செய்த பொலிஸார் அங்கு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தவர்களைக் காணொளி மற்றும் புகைப்படங்களை எடுத்து அச்சுறுத்தும் வகையில் செயல்பட்டுள்ளனர்.

இவற்றைக் காணொளியை எடுத்த ஊடகவியலாளர்களையும் பொலிஸார் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தும் வகையில் காணொளி எடுத்துள்ளனர்.

ஊடகவியலாளர் சந்திப்பை முடித்து விரைவாக செல்லுமாறு அங்கு வந்திருந்தவர்களுடன் பொலிஸார் தொடர்ச்சியாகத் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.



# வாகன விபத்தில் தாய் பலி

பாறை ஒன்றில் இருந்து சுமார் 100 அடி பள்ளத்தில் வாகனம் விழுந்ததில், 28 வயதுடைய ஒரு குழந்தையின் தாயான பெண் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம், காலி, யக்கலமுல்ல, கராகொட பகுதியில் புதன்கிழமை(16) இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த மேலும் மூவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யக்கலமுல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓர் அங்கவீனமான சிப்பாய் ஒரு காரை ஓட்டிச் சென்று கொண்டிருந்தார், அது ஒரு பாறையிலிருந்து சுமார் 100 மீட்டர் பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

காயமடைந்தவர்களில் ஓட்டுநர் கொல்லப்பட்ட பெண்ணின் தாயும், பாலர் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளையும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யக்கல முல்லைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வாகன விபத்தில் அறுவர் காயம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

வேகமாகப் பயணித்த முச்சக்கர வண்டி, தனியார் பேருந்தொன்றுடன் மோதியதில் முச்சக்கர வண்டியில் பயணித்த ஆறு பேர் படுகாயமடைந்து டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் புதன்கிழமை (16) இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்தவர்களில் ஒரு பாடசாலை மாணவன் உட்பட மூவர் கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹட்டனில் இருந்து ஹட்டன் - லெதண்டி தோட்டத்திற்குச் சென்ற முச்சக்கர வண்டியின் சாரதி அதிக மது போதையிலிருந்ததாகவும், 13 வயதுடைய பாடசாலை மாணவன் மற்றும் அவரது நான்கு நண்பர்களை முச்சக்கர வண்டியில் ஏற்றிக் கொண்டு அதிவேகமாகப் பயணித்த போது, மஸ்கெலியாவில் இருந்து ஹட்டன் நோக்கிச் சென்ற தனியார் பேருந்தின் முன்பக்கத்தில் மோதியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தில் முச்சக்கர வண்டி பலத்த சேதமடைந்துள்ளதுடன் பேருந்து சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

# கேரள கஞ்சாவுடன் மூவர் கைது

வடக்கு மாகாண சிறப்பு சோதனைப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், அடம்பன் பொலிஸ் பிரிவில் மன்னார்- யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள வெட்டய முறிப்பு பகுதியில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.



இதன்போது, 18 கிலோ 200 கிராம் கேரள கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மன்னார் பொலிஸ் பிரிவின் மன்னார் நகரில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போது, 200 கிராம் கேரள கஞ்சாவை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு, அடம்பன் மற்றும் மன்னார் பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டார்.

பதில் பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் பொலிஸாரால் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் குற்றம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக, வியாழக்கிழமை (17) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போதே இவை கைப்பற்றப்பட்டன.

# கருங்கல்லால் தாக்கியதில் சித்தப்பா பலி

கருங்கல்லால் முகத்திலேயே தாக்கியதில், சித்தப்பா மரணமடைந்த சம்பவம் ஒன்று வெல்லவாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரந்தெனிய ரணவராவ பிரதேசத்தில், கடந்த 13ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ரந்தெனிய, ரனவர பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான தேவயலகே விஜேரத்ன என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் நடத்திய விசாரணையில், பழைய தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை நடந்திருப்பது தெரியவந்துள்ளது.

இறந்தவரின் உடலுக்கு அருகில் ஒரு பெரிய கருங்கல்லும் கிடந்துள்ளது. சந்தேக நபரும் அவரது சித்தப்பாவும் ஒன்றாக மது அருந்திக்கொண்டிருந்தனர், இருவருக்கும் இடையே ஒரு பழைய தகராறு தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதத்திற்குப் பிறகு, உறவினரான சித்தப்பாவை அந்த நபர் அடித்து உதைத்துள்ளார். சித்தப்பா தரையில் விழுந்த பிறகு, அவர் அருகிலுள்ள ஒரு கருக்கல்லை எடுத்து சித்தப்பாவின் முகத்தில் பலமுறை அடித்தார். அவர், இறந்துவிடவே, அங்கிருந்து சந்தேக நபர் தப்பியோடியுள்ளார் என்றும், அவரை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் வெல்லவாய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# GovPay கட்டண அமைப்புக்கு தபால் திணைக்களம் எதிர்ப்பு



போக்குவரத்து அபராதங்களுக்கான GovPay கட்டண அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதால் இலங்கையின் தபால் திணைக்களம் கணிசமான வருவாய் இழப்பைச் சந்தித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

புதிய டிஜிட்டல் சேவையானது, அத்தகைய கொடுப்பனவுகளிலிருந்து தபால் திணைக்களத்தால் ஈட்டப்படும் வருமானத்தை நீக்கியுள்ளது என்று தபால் தொழிற்சங்க முன்னணி (UPTUF) தெரிவித்துள்ளது.

தபால் அலுவலக அடிப்படையிலான அபராதக் கட்டணங்களிலிருந்து இந்த மாற்றத்தால் தபால் திணைக்களம் ஆண்டு வருவாயில் ரூ.600 மில்லியன் முதல் ரூ.800 மில்லியன் வரை இழக்கிறது என்று தொழிற்சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

தபால் திணைக்களம் ஏற்கெனவே தபால் நிலையங்களில் பொலிஸிற்கான அபராதம் செலுத்தும் நபர்களுக்கு புதிய குறுஞ்செய்தி அறிவிப்பு முறையை அறிமுகப்படுத்தியுள்ள போதிலும், போக்குவரத்து அபராதங்களுக்கான இந்த புதிய டிஜிட்டல் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளதாக தபால் தொழிற்சங்க முன்னணி வெளிப்படுத்துகிறது.

அபராதம் செலுத்திய நபருக்கும், சம்பந்தப்பட்ட போக்குவரத்து பொலிஸ் அதிகாரிக்கும் குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கும் வகையில் இந்த அமைப்பு உருவாக்கப்பட உள்ளதாகக் கூறிய தொழிற்சங்கம், பொலிஸ் பிரிவின் பதில் இல்லாததால் இது செயல்படுத்தப்படவில்லை என்று கூறியது.

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை எதிர்க்கவில்லை என்பதை வெளிப்படுத்திய தொழிற்சங்கம், தபால் திணைக்களத்தால் வடிவமைக்கப்பட்ட குறுஞ்செய்தி அபராத முறையைத் தொடங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியது, வருவாய் இழப்பு திறைசேரியை நேரடியாகப் பாதிக்கக்கூடும் என்று எச்சரித்தது.

GovPay நிகழ்நிலை போக்குவரத்து அபராதம் செலுத்தும் முறை ஒரு முன்னோடித் திட்டமாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதால், அதன் SMS அபராத முறையைத் திருத்தி ஒருங்கிணைக்குமாறு தொழிற்சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியது.

# இயற்கை வளங்களை சூறையாடுவோருக்கு எதிரான நடவடிக்கை வேண்டும்

எதிர்கால சந்ததியினருக்காக இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருடைய கடமையாகும். எனினும், நாட்டில் சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, எதிர்கால சந்ததியினருக்கு என்ன மிஞ்சப் போகிறது என்பது கவலைக்குரிய விடயமாகவே இருக்கிறது.

நாட்டின் பல பாக்கங்களிலும் சட்டவிரோதமான காடழிப்பு, மணல் கொள்ளை, மண் அகற்றல், மாணிக்ககல் அகழ்தல், மரங்களைத் தரித்து பலகையாக்கி விற்பனை செய்தல். கால்வாய்களை அகழ்ந்து, மாணிக்ககல், மணல், மண் போன்றவற்றை அகழ்ந்தெடுத்து கொள்ளை விலைக்குச் சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்தல் ஆகிய அதிகரித்துள்ளன.

காடழிப்பினால், காட்டு விலங்குகள் மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளுக்கு நுழைந்து, பயிர்களை நாசம் செய்கின்றன. வீடுகளைத் துவம்சம் செய்துவிடுகின்றன. ஏன். உயிர்களையும் பறித்து விடுகின்றன. இவற்றுக்கெல்லாம், இயற்கையின் மீதான மனிதனின் அத்துமீறல்களே பிரதான காரணியாக இருக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் உள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பகுதிகளில் தற்போது நடைபெற்று வரும் மணல் அகழ்வு மோசடி, முழுப் பகுதியையும் ஒரு நீர்த்தேக்கமாக மாற்றும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இந்த மணல் அகழ்வு அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியப்படுகிறது. இப்போது அரை மில்லியன் கனசதுர மணல் தோண்டி எடுக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

கட்டிடம் கட்டுவதற்கு ஏற்ற மெல்லிய மணல், இந்தப் பகுதிகளில் எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. கண்ணிவெடிகள் இருப்பதால், பொதுமக்களும் பாதுகாப்புப் படையினரும் இந்தப் பகுதிகளுக்குள் நுழையத் தயங்குகிறார்கள். இதற்குக் காரணம் மரண பயம். ஒரு பொலிஸ் அதிகாரி இறந்தால், ஒரு முழு குடும்பமும் அனாதையாகிவிடும். ஒரு குடிமகன் இறந்தால், ஒரு முழு குடும்பமும் அனாதையாகிவிடும். இந்த மணலை தோண்டி டிராக்டர்கள் மற்றும் டிப்பர்களில் ஏற்றும் சராசரி தொழிலாளியும் தனது உயிரைப் பணயம் வைக்கிறார்.

கண்ணிவெடிகளை அகற்றிவிட்டதாக அவர்கள் கூறினாலும், அவற்றை 100% அகற்றிவிட்டதாக அர்த்தமல்ல. அகற்றப்படாத ஒரு கண்ணிவெடியில் மண்வெடிப்பட்டால், அது உடனடியாக அகற்றப்படா விட்டாலும், அது வெடித்து ஏழு அல்லது எட்டு பேர் இறந்துவிடுவார்கள். இதேபோல், மணல் ஏற்றிச் செல்லும் டிப்பர் அல்லது டிராக்டர் ஒரு கண்ணிவெடியின் மீது மோதினால், உடனடியாக ஒரு வெடிப்பு ஏற்பட்டு, டிராக்டர் ஓட்டுநர் அல்லது டிப்பர் ஓட்டுநரின் உடல் பாகங்கள் மணலுடன் கலக்கப்படும்.

இதுபோன்ற சட்டவிரோத செயல்கள் தற்போது அடிக்கடி நடைபெற்று வருகின்றன. அரசாங்க அனுமதியின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுவது அத்தகைய ஒரு செயலாகும்.

மணல் கடத்தல்காரர்களை ஒடுக்க போதுமான பொலிஸ் ஆள் பலம் தங்களிடம் இல்லை ஆனால் இது போதாது. அரசாங்கமும் அதை ஒப்புக்கொண்டுள்ளது. எனவே, குறைந்தபட்சம் கூடுதல் பொலிஸ் அதிகாரிகளை விரைவில் பொலிஸ் திணைக்களத்துக்கு வேண்டும். அத்துடன், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும், இயற்கை வளங்களுக்குத் தீங்கிழைப்போரை இனங்கண்டு, அவ்வாறானவர்களுக்குத் தகுந்த தண்டனையை வழங்க வழிசமைக்கவேண்டும். இல்லையேல், எதிர்கால சந்ததியினர், இயற்கையை வெறும் காட்சிகளிலும், காணொளிகளில் மட்டுமே காண முடியும். என்பது வருத்தமானது என்பதை நினைவுறுத்துகின்றோம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

பிரம்மத்தில் இணையும் வழி என்ன என்று சொன்னாலும் அதன் உண்மை பற்றி எம்மால் கூறமுடியாது.

காற்று, வெப்பம், நிலம் ஆகாயம் எல்லாமே பிரம்மத்தில் அடக்கம். பிரபஞ்சம் இறைவன் ஆட்சியில் உள்ளது. அதன் அகண்ட ரூபம் இயம்புவதற்கு அரிது.

நாங்கள் வாழும் பூமி பற்றியே எமக்கு சரியாகச் சொல்லமுடியாது. பரந்த ஆகாயத்தில் பலகோடி நட்சத்திரங்கள். இவற்றுடன் பூமிப்பந்தை ஒப்பிட்டால் ஒரு தூசிக்கும் குறைவானது. நட்சத்திரம், கிரகங்கள், வால்வெள்ளிகள் என்று இவற்றில் சிறு அங்கம் சூரியக் குடும்பம்.

இவற்றை ஆளும் தலைவன் திருவடியில் இணைவதே அம்பமாவுக்கான பாக்கியம். உயிர்கள் யாவும் எத்தனை எத்தனை பிறவிகள் எடுத்தனவோ யார் அறிவார்?

இந்த உயிரினங்களில் மானிடப் பிறவியும் ஒன்று! ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு சக்தியுண்டு. சிற்றறிவுடன் பிரபஞ்சத்தை அளக்க முடியாது.

- பருத்தியூர் பால.வயிரவநாதன்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை – 16

# பண்டாரநாயக்கவின் வருகையும் சுதேசிகளும்

1956 பொதுத் தேர்தலுக்காக, எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, மகாஜன எக்சத் பெரமுனா (மக்கள் ஐக்கிய முன்னணி) என்ற தேர்தல் முன்னணியை உருவாக்கினார். பண்டாரநாயக்க முன்னணியின் தலைவராக இருந்தார். 1950 முதல் இருந்த அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வேறுபட்ட எந்த கொள்கைகளையும் வெளிப்படுத்தவில்லை. உண்மையில், பண்டாரநாயக்க எந்தவொரு கொள்கை வேறுபாடுகள் காரணமாகவும் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறவில்லை, மாறாகக் கட்சியின் தலைமைக்கான வாய்ப்பு மங்கிவிட்டதாலேயே வெறியேறினார்.

புண்டாரநாயக்கவின் முன்னணியின் பிரதான பங்காளியாக இருந்தவர் விப்லவகாரி லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரான பிலிப் குணவர்தன. அவர் இலங்கையில் 'மார்க்சியத்தின் தந்தை' என்று உண்மையில் புகழப்பட்டார். முன்னணியை உருவாக்குவதில் அவரது உறுதியான நோக்கம் ஐ.தே.க.வை தோற்கடிப்பதாகும், குணவர்தன அந்தக் கொள்கைகளைத் தீவிரமாக விமர்சித்திருந்தார். முன்னணியில் உள்ள பல்வேறு கட்சிகளுக்கு இடையேயான ஒரே உண்மையான தொடர்பு, அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவப்பட்ட உயரடுக்கை அவர்கள் பொதுவாக நிராகரிப்பதாகும். அந்நியருக்குச் சொந்தமான தோட்டங்கள், போக்குவரத்து, காப்பீடு மற்றும் வங்கித் துறைகளை தேசியமயமாக்குவதைத் தவிர, முன்னணி எந்தவொரு பொதுவான சமூக, விவசாய அல்லது தொழில்துறை கொள்கையையும் முன்வைக்கவில்லை. இருப்பினும், திருகோணமலையில் உள்ள பிரிட்டிஷ் கடற்படைத் தளத்தையும், நாட்டில் நிறுத்தப்பட்டுள்ள பிரிட்டிஷ் துருப்புக்களையும் அகற்ற வேண்டும் என்று அது கோரியது.

1955ஆம் ஆண்டு இறுதி வரை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், விப்லவகாரி சமசமாஜக் கட்சியும் அதிகாரத்திற்கான தீவிர போட்டியாளர்களாக இருக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாற்றாக இலங்கா சமசமாஜக் கட்சி மட்டுமே சாத்தியமானதாகத் தோன்றியது. ஆரம்பத்திலிருந்தே இலங்கா சமசமாஜக் கட்சி நாட்டின் பொருளாதார பின்தங்கிய நிலைக்கு அதிக அழுத்தம் கொடுத்து, கிராமப்புற வறுமையை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. ஆனால், மொழிப் பிரச்சினையால் உருவாக்கப்பட்ட உணர்ச்சிப்பூர்வமான அரசியல் சூழ்நிலைதான், பண்டாரநாயக்காவுக்கு ஒரு தேசியவாத, ஆனால் அடிப்படையில் இனவாத மற்றும் பேரினவாத தோரணையை ஏற்றுக்கொண்டு, தனது சொந்த அரசியல் முன்னேற்றத்திற்காக சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பளித்தது. அந்த நேரத்தில், டாக்டர் என்.எம்.பெரேரா தலைமையிலான இலங்கா சமசமாஜக் கட்சி மற்றும் டாக்டர் எஸ்.ஏ.விக்ரமசிங்க தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளும் சிங்களம் மற்றும் தமிழ் இரண்டையும் நாட்டின் அதிகாரப்பூர்வ மொழிகளாகக் கோரினார்கள். இதற்கு நேர்மாறாக, மக்கள் ஐக்கிய முன்னணி, தமிழ் பற்றி எதுவும் குறிப்பிடாமல் 'சிங்களம் மட்டும்' என்று பிரசாரம் செய்தது, மேலும் பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தால் '24 மணி நேரத்திற்குள்' அதை ஒரு யதார்த்தமாக்குவதாக உறுதியளித்தார்.

இந்தத் தேர்தல் அரசியல் அல்லது பொருளாதாரப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு நடத்தப்படவில்லை, மாறாக முற்றிலும் மொழி, மதம் மற்றும் கலாச்சாரத்தை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது. முன்னதாக ஐ.தே.க. அரசாங்கம் அரிசி மானியத்தையும் பள்ளி மாணவர்களுக்கு இலவச மதிய உணவு பணிசையும் இரத்து செய்தது மட்டுமே பொருளாதாரப் பிரச்சினைகளாகக் கருதப்பட்டது.

ஆங்கில மொழி, கிறிஸ்தவ மதம் மற்றும் மேற்கத்திய கலாசாரத்தை பொதுவாக அரியணையிலிருந்து அகற்றுவதாக மக்கள் ஐக்கிய முன்னணி உறுதியளித்ததால், அது கிராம மட்டத்தில் பாரம்பரிய அதிகார அமைப்பால் ஆதரிக்கப்பட்டது. நிலப்பிரபுத்துவ எச்சங்கள், சிங்கள பள்ளி ஆசிரியர்கள், சுதேசிய மருத்துவர்கள் மற்றும் பௌத்த மதகுருமார்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்றது. இருப்பினும், கிராம மட்டத்தில் உள்ள இந்த ஆதிக்க சக்திகள், 'ஒரு மொழி-ஒரு மதம்-ஒரு கலாசாரம்' என்ற ஆதிக்கக் கொள்கை ஒரு பன்முக சமூகத்தில் எவ்வாறு பிரிவினையை ஏற்படுத்தும் மற்றும் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் தடுக்கும் என்பதை உணரவில்லை. இதன் விளைவாக ஏற்படும் பாகுபாடு பிரிவினைவாத கோரிக்கைகளுக்குக் கூட வழிவகுக்கும் என்பதை அவர்களால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. இந்த ஆதிக்க கிராம குழுக்கள் சலுகைகள் மற்றும் ஆதரவை எதிர்பார்த்து கிராமங்களில் தொகுதி வாக்குகளை மக்கள் ஐக்கிய முன்னணிக்கு வழங்கின. பெரும்பாலான சாதாரண ஏழைகள், நிலமற்ற குத்தகைதாரர் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் கிராம கைவினைஞர்கள், இந்த கிராம அதிகாரக் குழுக்களில் சிலர் ஒடுக்குமுறையாளர்களாகவும் சுரண்டுபவர்களாகவும் இருந்தனர். எனவே, பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தது, எந்தவொரு புரட்சிகர எழுச்சியின் உச்சியில் அல்ல, இந்தப் பிற்போக்குத்தனமான பதிலின் பின்னணியிலேயே.

1956 ஆம் ஆண்டு பெற்ற வெற்றி நாட்டில் சாமானிய மக்களின் யுகத்தை அறிவித்ததாக புதிய ஆளும் குழு அடிக்கடி கூறியது. ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. தலைவர்கள் இன்னும் பழைய ஆளும் உயர் நடுத்தர வர்க்கத்தினரைச் சேர்ந்தவர்கள், மேலும், வர்க்க அதிகாரப் பகிர்வில் எந்த மாற்றமும் இல்லை. சாமானியர்களின் சகாப்தத்தின் விடியலின் இந்தப் பிரசாரம், சாமானிய மக்கள் அரசியல் ரீதியாக விழிப்புணர்வு பெறுவதையும், தங்களை ஒழுங்கமைத்துக் கொள்வதையும், புதிய ஆட்சியாளர்களிடமிருந்து அதிகாரத்தைப் பறிப்பதையும் தடுப்பதை நோக்கமாகக் கொண்டது. எனவே,புதிய அரசாங்கம் தன்னை சோசலிஸ்ட் என்று அழைத்துக் கொண்டு, நாடு 'சோசலிசத்திற்கு மாறுவதில்' இருப்பதாக வலியுறுத்தியது. ஆனால், வர்க்க ஆதிக்கம் மற்றும் சுரண்டலால் ஏற்படும் பிரச்சினைகள் குறையாமல் தொடர்ந்தன. பெரும்பான்மையான ஏழைகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டனர். அவர்களின் அடிமைத்தனமான சார்பு சமூக அந்தஸ்து அரசியலில் அவர்களின் பங்கேற்பைக் குறை மதிப்பிற்கு உட்படுத்தியது. மேலும் அவர்கள் பழைய மற்றும் புதிய ஆளும் குழுக்களின் சமூக சமத்துவமின்மை, பொருளாதார சுரண்டல் மற்றும் அரசியல் ஆதிக்கத்திற்குத் தொடர்ந்து பலியாகினர்.

பண்டாரநாயக்க தனது தேர்தல் அறிக்கையில் 'வெளிநாட்டு உரிமையாளர்களுக்குச் சொந்தமான தோட்டங்கள், போக்குவரத்து, வங்கி மற்றும் காப்பீடு உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய தொழில்களையும் தேசியமயமாக்குவதை' ஆதரித்தார். முந்தைய அரசாங்கத்தின் கொள்கைக்கு மாறாக, பண்டாரநாயக்கவின் அரசாங்கம் விவசாயத்தில் ஒரு மாற்றக் கொள்கையையும், பொருளாதாரத்தின் தொழில்துறை மற்றும் சேவைத் துறைகளில் ஒரு தலையீட்டுக் கொள்கையையும் பின்பற்றியது. அதன் நோக்கங்களில், பொதுத்துறையில் புதிய தொழில்களை நிறுவுவதும் அடங்கும். பிலிப் குணவர்த்தனவின் கட்சியைச் சேர்ந்த வில்லியம் டி சில்வா தொழில்துறை அமைச்சரானார். 'தொழில் மயமாக்கல் விஷயத்தில் நான் புதிதாகத் தொடங்க வேண்டும் என்று சொல்வதில் தவறில்லைறு என்ற மறுக்க முடியாத உண்மையை அவர் உடனடியாகச் சுட்டிக்காட்டினார். எனது முன்னோடிகள் நான் எடுத்துக்கொள்ளக்கூடிய எந்த ஒரு சாதகமான புள்ளியையும் கூட எனக்கு விட்டுச் செல்லவில்லை. அரசு முதன்முறையாக பொது முதலீட்டின் பகுதிகளையும், தனியார்த் துறைக்கு விடப்பட வேண்டியவற்றையும் வரையறுத்தது. இரும்பு, உருக்கு, ரசாயனங்கள், சிமெந்து, உரங்கள், துணிகள் மற்றும் சீனி போன்ற அடிப்படை கனரக தொழில்கள் அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டன. இலகு ரக நுகர்வோர் பொருட்கள் உற்பத்தி தனியார் நிறுவனத்திற்கு விடப்பட்டது.

1957இல் அரசாங்கம் சாலை போக்குவரத்தை தேசியமயமாக்கியது. பேருந்து தேசியமயமாக்கலுக்குப் பின்னால் உள்ள கொள்கை என்னவென்றால், இந்த சேவை இலாபகரமான நகர்ப்புறங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படக்கூடாது, ஆனால் கிராமப்புறங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். உண்மையில், மூன்று கமிஷன்கள் (1948, 1954 மற்றும் 1956இல்) அனைத்தும் தேசியமயமாக்கலை பரிந்துரைத்தன. புதிய அரசாங்கத்தைப் பாதித்த மற்றொரு உண்மை என்னவென்றால், பேருந்து நிறுவன உரிமையாளர்கள் ஐ.தே.கவின் நிதியாளர்களாகவும் ஆதரவாளர்களாகவும் இருந்தனர். அடுத்த ஆண்டு, அரசாங்கம் கொழும்பு துறைமுகத்தில் பொருட்களைக் கையாளும் சேவையையும் தேசியமயமாக்கியது.

பண்டாரநாயக்கவின் அரசாங்கம் மற்றும் அடுத்தடுத்த அரசாங்கங்களின் கீழ் தேசியமயமாக்கல் எப்போதும் சட்டப்பூர்வ உரிமையைத் தனியார் நிறுவனங்களிலிருந்து பொதுமக்களுக்கு மாற்றுவதற்கும், தனியார் நிறுவனங்களுக்குப் பதிலாக ஒரு அரசாங்க நிறுவனத்தை மாற்றுவதற்கும் மட்டுமே வரையறுக்கப்பட்டது. இது இந்த சட்டச் சட்டத்துடன் நிறுத்தப்பட்டது, மேலும் சமூகத்தின் நலன்களுக்காகத் திறமையான மேலாண்மை என்ற அர்த்தத்தில் சமூக மயமாக்கல் அதைத் தொடர்ந்து வரவில்லை. தேசியமயமாக்கல் முதலாளித்துவ மேலாண்மை நுட்பங்களில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. மலிவான மற்றும் திறமையான சேவையை வழங்குதல் மற்றும் சமூகத் தேவையைப் பூர்த்தி செய்தல் என்ற சோசலிச நோக்கத்திலிருந்தும் அது உருவாகவில்லை. செயல்பாட்டுக் கட்டுப்பாடு ஒரு புதிய அதிகாரத்துவத்தின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. இது நிர்வாகப் பணியாளர்களின் படிநிலை அடுக்குகளுடன் மிக அதிகமாக மாறியது. இவை முதலாளித்துவ நிர்வகிக்கப்பட்ட நிறுவனங்களின் சலுகைகள் மற்றும் விளிம்பு நன்மைகளைத் தாங்களாகவே சம்பாதிக்க முயன்றன. இதன் விளைவாக, இந்த தேசியமயமாக்கப்பட்ட முயற்சிகள் விரைவில் சிக்கனமாகவும் சமூகத்திற்குத் திருப்திகரமான சேவையை வழங்கவும் தவறிவிட்டன.

## கடிதங்கள்

### "வீதியை சீர் செய்யுங்கள்"

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட காட்மோர் பிரதான வீதி, சுமார் 3 கி.மீ. தூரம் வரை மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுவதால் அப்பகுதி மக்கள் மற்றும் வாகன சாரதிகள் போக்குவரத்தின் போது பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

மோக்கா பாடசாலை முதல் காட்மோர் சந்தி வரையான மூன்று கி.மீ. தூரத்தை பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் (TRUST) பொறுப்பேற்று மொக்கா தோட்ட காரியாலயம் வரை மட்டும் செப்பனிட்டுள்ளதுடன் மிகுதியைச் செப்பனிடப் படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால் கர்ப்பிணி தாய்மார்கள், நோயாளிகள், பாடசாலை மாணவர்கள், சாரதிகள் மற்றும் காட்மோர் பகுதியில் பிரசித்தி பெற்ற நீர் வீழ்ச்சியைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தினமும் நூற்றுக்கணக்கில் வருகை தரும் பயணிகள் தமது சொகுசு வாகனங்களை இடைநடுவில் நிறுத்தி விட்டு நடந்து செல்ல வேண்டி உள்ளதாகவும் இவ்வாறு நிறுத்தி வைக்கப்படும் வாகனத்தில் உள்ள சில முக்கிய பொருட்கள் களவாடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து சம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்தித் தீர்வை பெற்றுத் தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். -

செ.தி.பெருமாள்




பரதம் பரப்பும் வித்தகி

# ஸ்ரீமதி அம்பிகா சிற்சபேசன்

**நியூசிலாந்தில் இருபது ஆண்டுகள் தாண்டும் புனிதப் பணி**



**கலாநிதி மு.ந.சிவச்செல்வன்,
இளைப்பாறிய பேராசிரியர்,
நியூசிலாந்து.**




இந்தியக் கலாச்சாரத்தியே முதன்மையான பாரம்பரியக் கலையான பரதநாட்டியம், தென்னிந்திய தமிழ்நாட்டின் தெய்வீகத் தொன்மை கொண்டதும் மிகவும் பிரபலமானதுமாகும். இந்த நாட்டிய வடிவமானது, தெய்வீகத்தோடும் ஆன்மீகத்தோடும் இணைந்து, உடல்சார்ந்த பாவங்களை வெளிக்கொணரும் சாத்வீகமான தூயகலையெனலாம்.

ஆகவே, இந்து சமய, சமண மதங்கள் சார்ந்த ஆழ்ந்த சமயக் கோட்பாடுகளையும், தெய்வ வழிபாடுகள் சார்ந்த தத்துவங்களையும், உள்ளடக்கியே பரதநாட்டியங்கள் யாவையும் வடிவமைக்கப்படுகின்றன. ஆகவே, ஒரு சைவ சமயக் கோட்பாடுகளையும், சமய ஆசாரத்தையும் பேணிவாழும் குடும்பமொன்றில், என் மதிப்புக்குரிய ஆசிரியரான அமரர் அருணாசலம் அவர்களின் புதல்வியாக உதித்த திருமதி அம்பிகா சிற்சபேசன், சிறுமியாக இருக்கும்போதே இப் புனிதமான கலையில் கவரப்பட்டது ஆச்சரியமானதல்ல. அதோடு, பொறியியல் மேற்கல்வியைத் தொடரும் சந்தர்ப்பம் கிடைத்ததால் அந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பரதநாட்டியக் கல்வியையும் பாரம்பரிய குரு சிஷ்யை முறையில் கற்று அதை முழுதாகக் கற்றுதகைமைசால் நடன வித்தகியாக வெளியேறினார்.

இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து வெவ்வேறு வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் உட்பட வேறு காரணங்களால் வந்து குடியேறிய இந்தியர்களும் நியூசிலாந்திலும் வாழ்கின்றனர். இப்படியான புலம்பெயர்ந்த நாம் மிகவும் இழந்து வருவது எமது உறவுகள் மட்டுமல்லாமல், எமது சமய கலாச்சாரங்களையும் எம் தாய் மொழியையும் அவற்றையொட்டிய இசை இயல் நாடகக் கலைகளையும் தாம். இந்நிலையில் இங்கு வந்து, கணித ஆசிரியப் பணியோடு, பரதக்கலையைத் தமிழர்களுக்கு மட்டுமல்லாமல், மற்றைய பிறமொழி பேசும் தென்னிந்தியர்கள் உட்பட்ட சகல இனத்தினர்க்கும் சென்றடையச் செய்வதற்கும், இந்தக் கலை வழிவழியாக தொடரவேண்டும் என்ற பெருநோக்கோடும், தமிழ் நியூசிலாந்து நடனப் பாடசாலையை ஆரம்பித்து, அர்ப்பணிப்புடன் அதன் நிறுவன இயக்குநராகவும் குருவாகவும் நடாத்தி, வெற்றி கண்டிருக்கிறார் அம்பிகா அம்மையார் அவர்கள். கடந்த இருபது வருடங்களாக ஆக்லாந்தில் வெற்றி நடைபோடும் அவரது பாடசாலையும் தொடர்ந்தொலிக்கும் சதங்கை ஒலியும் தாளச் சத்தமும் அதற்கு நற்சான்று பகிர்கின்றன.

நியூசிலாந்தில் வேறு இடங்களில் மட்டுமல்லாது, அவுஸ்திரேலியா, செசெல்ஸ் போன்ற இடங்களிலும் அம்பிகா அம்மையாரது மாணவர்கள் சென்னை வருடாந்த மார்கழி இசை நாட்டிய நிகழ்விலும் பங்குபற்றிப் புகழ் சேகரித்துள்ளார்கள். தமிழ்ச் சமூகத்தினரோடு மட்டும் நின்று விடாமல் பரந்த முறையில் நியூசிலாந்து வாழ் பல்வகைப்பட்ட சமுகங்கள் இணைந்த இந்திய, சீன, பசிபிக், மாவோரி இனங்களால் நடாத்தப்படும் பல்லின கலாச்சார பண்டிகை நிகழ்ச்சிகளில் தன் மாணவர்களைப் பங்கேற்ற வைத்து தமிழையும் அதன் சொத்தான பரதக் கலையின் சிறப்பையும் வெளிக்கொணர்ந்து வருகிறார். தமிழே ஒலியாகவும், இசையாகவும், பாடல்களாகவும், தமிழ் நியூசிலாந்து நடனப் பாடசாலையின் அடிநாதமாகத் திகழ்வதைக் காணலாம். அவரது பாடசாலை மாணவ மாணவிகளின் வருடாந்த நாட்டியச் சிறப்பு நிகழ்ச்சிகள் இலவசமாகப் பலருக்கும் கண்ணுக்கும் காதுக்கும் உளத்துக்கும் விருந்தாக இருப்பதை அடியேனும் பலதடவைகள் சென்று அனுபவித்திருக்கிறேன். அந்த நிகழ்ச்சிகளில் சைவ சமய அடிப்படைத் தத்துவங்களையும் போதனைகளையும் சார்ந்த தெய்வங்களின் ஆன்மீகக் கதைகளை உருவகப்படுத்தி, நாட்டிய உருவில் தயாரித்து பலரும் பயன் பெறச்செய்கிறார். அதேவேளையில், நாட்டியக் கலைக்குள் அடங்கும் இலட்சணங்கள் யாவும் ஒன்றிணைக்கப்பட்டு, மெருகேற்றப்பட்டு, அவரது நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. அவ்வகையில், அண்மையில் நடைபெற்ற 'கோவிந்தா' என்ற நாட்டிய நாடகம் கண்ணபிரானின் லீலைகளையும், தெய்வீகத் தன்மையையும், அவனது மகாபாரதப் பங்கேற்பையும் அழகுறக் காட்டிச் சபையோர் பாராட்டைப் பெற்றது. இளம் சிறார்கள் முதல் இளம் பருவத்தினர் வரையில் பல மாணவர்களை முறை தவறாமல் பயிற்றுவித்து மேடையேற்றும் ஆசானின் சிரமத்தையும் பெரு வெற்றியையும் வியக்காமல் இருக்க முடியாது. அவர்களது தரம் கண்டு முன்னேற்றி வல்லுநராகவும் வழிகாட்டிகளாகவும் உயர்த்திவிடும் உயர் பண்பு, எம்





தொடர் சந்ததியினர்க்கும் இக்கலை போய்ச்சேரும் வரப்பிரசாதமாக அமைகிறது.

அம்பிகா அம்மையாரின் அருங்கலை தொடரவும் பலமாகக் கைகொடுத்து அதை வளர்க்கவும் அவர் தேடிவைத்துள்ள பெரும் சொத்து, அவரது இரு அருமைப் புதல்வர்களான சகாயனும், சேயவனுமே. தம் தாயையே குருவாக ஏற்றுப் பயின்று இன்று நாட்டியக் கலைஞர்களாக விளங்கும் அவர்கள் தம் குருவின் நிகழ்ச்சிகளில் முக்கிய பாத்திரப் பங்குகொண்டும் ஒலி, ஒளி மேடை அமைப்பு என்பவற்றைத் திறம்படக் கையாண்டும் புலிக்குப் பிறந்த பிள்ளைகளாக மிளிர்கின்றனர். வெவ்வேறு துறைகளில் பயிற்சிபெற்று உயர்ந்திருப்பினும் தம் தாயாரின் வழியில் பெரு மதிப்புடனும் விவேகத்துடனும் முன்னிற்பது மிகவும் பாராட்டக்கூடியது. அதற்கு எல்லாவற்றிக்கும் மேலாக, குடும்பத் தலைவனாகவும், தமிழ் ஆர்வலராகவும், ஆய்வாளராகவும், சைவசமய நெறிமுறைத் தொண்டுகளை இங்குள்ள சமூகத்தினர்க்கு மனமுவந்து வழங்கும் என் நண்பருமான திரு சிற்சபேசன் இவர்கள் யாவற்றுக்குமே உறுதுணையாக நின்று வழிநடத்துகிறார் என்பது "ஒரு பெண்ணுக்கு முன்னால் ஒரு உண்மையான தலைவனின் உழைப்பு பெருந்துணையளிக்கும்" என்ற ஒரு உண்மையை வெளிப்படுத்துகிறது.

நியூசிலாந்து பல்கலாசார கவுன்சிலின் "கலாசார சேவையாளர்" விருது, நியூசிலாந்து இந்தியக் கூட்டமைப்பின் "இந்தியக் கலாச்சார தூதுவர்" விருது, தமிழக அரசின் 'அயலகத் தமிழ் சாதனையாளர்' விருது, நியூசிலாந்து தெலுங்கு அசோசியேஷனின் 'நல்லாசிரியர்' விருது, சென்னை பாரத் கலாசார அமைப்பின் "நாட்டிய ஆசிரியர்" விருது போன்ற பல விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்ற ஸ்ரீமதி அம்பிகா சிற்சபேசன் அம்மையார் தனது கலை வாழ்வையும் அதன் பெறுபேறான கலைத் தொண்டையும் சிறப்புடன் தொடர்ந்து, அவராலும் அவருக்கு இணையாக வளர்ந்துவரும் அவரது புதல்வர்களாலும், பரதநாட்டியக் கலை நியூசிலாந்து மக்களினது வாரிசுகளுக்குப் போய்ச் சேர ஆண்டவனை வேண்டி வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.



# புதிய உயிர்ப்பை பெற்றுத்தரும் புனித வெள்ளி

உலகம் அனைத்திலும் வாழும் கிறிஸ்தவர்கள் யேசுக்கிறிஸ்துவின் பாடுகள், மரணத்தை நினைவு கூர்ந்து இன்று வெள்ளிக்கிழமை(18) புனித வெள்ளியை அனுஷ்டித்து வருகின்றனர்.

எந்த மனிதன் இறந்தாலும், அந்த தினம் துக்க நாளாகத் தான் நினைவு கூறப்படுகிறது. ஆனால், இயேசுவின் சிலுவை மரண தினம் மட்டுமே, 'குட் பிரைடே' (*Good Friday*) என்றும், பெரிய வெள்ளி என்றும் அழைக்கப்படுகிறது.

மனித குலத்தைப் பாவத்தில் இருந்தும் சாவிலிருந்தும் மீட்பதற்காகவும், இறை வாழ்வை மனிதருக்கு அளிப்பதற்காகவும் துன்பங்கள் பலவற்றை தான் அனுபவித்து சிலுவையில் இயேசு கிறிஸ்து உயிர் துறந்தார் என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கை. புனித வெள்ளி என்பது துக்க நாளாக அனுஷ்டிக்கப்பட்டாலும், ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் இது மிக முக்கியமான நாள் என கருதப்படுகின்றது.

## புனித வெள்ளி வரலாறு:

சிலுவையில் அறைந்த இயேசுவைக் கண்டவர் பலரும் திகைப்புற்று நின்றனர். தன்னுடைய தோற்றம் பெரிதும் உருக்குலைந்து மனித சாயலில் இல்லாமல் போனதையும் பலரால் இகழப்பட்டதையும் மனிதர்களால் புறக்கணிக்கப்பட்டதையும் எண்ணி வேதனை அடைந்த மனிதராய் இயேசு கிறிஸ்து இருந்தார். காண்போர் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் இயேசு இருந்ததாக சொல்லப்படுகிறது.

உலகமே பாவத்தில் சிக்குண்டு சீர்குலைந்த போது மனித குலத்தைத் தெய்வ திருமகன் இரட்சித்த நாள் தான் புனித வெள்ளி. இந்நாள் ஒரு பொன்நாள். இந்நாளை ஒவ்வொரு கிறிஸ்தவராலும் மறக்கமுடியாத நாளாகக் கருத வேண்டும். இவ்வெள்ளியைப் பெரிய வெள்ளி என்றும் சொல்கின்றனர். சிலுவை அவமானத்தின் சின்னமாகும். ஏனென்றால், அது கொள்ளைக்காரன், கொலைகாரனுக்குத் தண்டனை கொடுக்கும் இடமாகும். ஆனால், இயேசு இந்த அவமான சின்னத்தையும் வெற்றிச் சின்னமாக மாற்றி அமைத்தார்.

யூதாசு இயேசுவை முத்தமிட்டுக் காட்டிக் கொடுக்க 30 வெள்ளிக் காசுகள் பெற்ற நிலையில், அவ்வாறு கைது செய்யப்பட்ட இயேசு முன் பல குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. குற்றச்சாட்டுகள் முன்னுக்குப் பின் முரணாக இருந்தாலும், மக்கள் இயேசு சாக வேண்டும் என விரும்பினர். அதுவரை இயேசுவைப் பின்தொடர்ந்த சீடர்களும் அவருக்குத் தண்டனை கிடைக்கப் போகிறது என்பதை அறிந்து அச்சத்தில் ஓடி விட்டனர். பிலாத்து மன்னன் இயேசுவை என்ன செய்ய வேண்டும் என கேட்க அவரை சிலுவையில் அறைய வேண்டும் என மக்கள் கூச்சலிட தன் பதவி பறிபோகும் என்று அஞ்சிய பிலாத்து மன்னன் இயேசுவின் இரத்த பழியில் தனக்குப் பங்கு இல்லை எனக் கூறி கைகளை கழுவினார். அதன் பிறகு படை வீரர்கள் இயேசுவின் ஆடையை அகற்றி முள் கம்பி அவரது தலையில் வைத்து ஒரு கோல் கொண்டு அடித்தனர்.

இயேசுவின் தோல் மீது சிலுவையைச் சுமத்தி கல்வாரி குன்றில் இயேசுவை அறைந்தனர். இயேசுவின் வலது புறமும் இடது புறமும் குற்றவாளிகளைச் சிலுவையில் அறைந்தனர். அப்போது, இயேசு முதல் வாசகத்தைக் கூறினார். தந்தையே இவர்களை மன்னியும். தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை என்றார். இதில் மொத்தமாக ஏழு வாசகங்களைக் கூறியுள்ளார்.

ஏழாவது வாசகத்தில் இயேசு பிதாவே என் ஆவியை உன்னிடம் தருகிறேன் என சத்தமாக சொல்லி தனது ஜீவனை விட்டார். இயேசு உயிர் திறந்த சிலுவை கிறிஸ்துவர்களுக்குத் தனி அடையாளமாக மாறியது. எனவே, பெரிய வெள்ளிக்கிழமையன்று சிலுவைக்கு வணக்கம் செலுத்தவே அனைத்து கிறிஸ்தவர்கள் எரியும் மெழுகுவர்த்தியை கைகளில் வைத்திருக்க நடுவே சிலுவை பவனியாகக் கொண்டு வரப்படும்.

புனித வெள்ளியைத் தூய்மையான இதயத்துடன் நினைத்து மனதார ஜெபிக்க வேண்டும் எனவும் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு கேட்போம் எனவும் கிறிஸ்தவர்கள் கூறுகின்றனர்.

## புனித வெள்ளி சிறப்புகள்:

புனித வெள்ளி அல்லது 'குட் பிரைடே' என்பது கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கியமான நாளாகும். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, அவர் உயிர் நீத்த நிகழ்வினை நினைவு கூறுவதற்காகக் கொண்டாடப்படும் நாளாகும்.

புனித வெள்ளி, பெரிய வெள்ளி அல்லது கருப்பு வெள்ளி என பல பெயர்களால் அழைக்கப்படும் இந்த நாள், மனித குலத்தின் பாவங்களை போக்குவதற்காக இயேசு கிறிஸ்து தனது உயிரைத் தியாகம் செய்த நாள் என கருதப்படுகின்றது.

## புனித வெள்ளி கொண்டாடுவதன் நோக்கம்:

புனித வாரத்தின் ஒரு பகுதியாக 'பாஸ்கா' திருநாளும் அனுஷ்டிக்கப்படுகிறது. (பாஸ்கா என்றால் கடந்து செல்லுதல் என்று பொருள்படும்) புனித வெள்ளி என்பது துக்கம், தவம் மற்றும் உண்ணாவிரதம் கடைபிடிக்கும் ஒரு துயர நாளாகும். இயேசு கிறிஸ்துவின் கடைசி இரவு உணவு நாளே பெரிய வியாழனாக அனுஷ்டிக்கப்படுகிறது. அன்று துவங்கி, ஈஸ்டர் வரை இந்த துக்க காலம் கடைபிடிக்கப்படும். ஈஸ்டர் ஞாயிறு அன்று மாலை பிரார்த்தனையுடன் இந்த துக்க காலம் நிறைவடையும். ஈஸ்டர் என்பது, இயேசு கிறிஸ்து மீண்டும் உயிர்த்தெழுந்த காலம் என்பதால் அந்த நாள் கொண்டாட்டத்திற்குரிய நாளாகக் கருதப்படுகிறது.

## 3 மணி நேரம் மௌனத்திற்கு காரணம்:

கத்தோலிக்க மற்றும் கிழக்கு ஆர்த்தடாக்ஸ் உட்பட கிறிஸ்தவர்களில் சில பிரிவினர் புனித வெள்ளியை நோன்பு மற்றும் தேவாலய சேவை அனுஷ்டிக்கும் நாளாக கருதுகிறார்கள். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, பலியாகிய போது, பூமியை இருள் சூழ்ந்ததாக பைபிள் கூறுகிறது. இதனால் புனித வெள்ளி அன்று மாலை 3 மணி முதலான 3 மணி நேரம் வேதனையின் சேவை என்ற பெயரில் சிறப்பு பிரார்த்தனைகள் நடத்தப்படுகிறது.

## இயேசு சிலுவையில் மொழிந்த ஏழு வார்த்தைகள்:

1.கடவுளே, இவர்களை மன்னியும் தாங்கள் செய்வது, இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்.

2.தனது வலது பக்கத்தில் இருந்த கள்ளனை பார்த்து, நீ இன்றைக்கும் என்னுடனே பரதீசிலிருப்பாய்.

3.தன் தாயை நோக்கி, இதோ உன் மகன் என்றும், சீசன் யோவானை நோக்கி, இதோ உன் தாய் என்றார்.

4.கடவுளே, கடவுளே ஏன் என்னை கைவிட்டீர்.

5.தாகமாயிருக்கிறேன்.

6. எல்லாம் முடிந்தது.

7.கடவுளே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்.

## புனித வெள்ளி 2025:

பொதுவாக ஒவ்வொரு ஆண்டு மார்ச் 20 முதல் ஏப்ரல் 23 வரையிலான காலத்திலேயே புனித வெள்ளி கடைபிடிக்கப்படுவது வழக்கம். இந்த ஆண்டு ஏப்ரல் 18ஆம் திகதி புனித வெள்ளியும், ஏப்ரல் 20ஆம் திகதி ஈஸ்டர் தினமும் கொண்டாடப்பட உள்ளன. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட போது, அனுபவித்த வலி, வேதனைகள், தியாகம் ஆகியவற்றை நினைவு கூறும் நோக்கத்துடன், இந்த தவக்காலம் கிறிஸ்தவர்களால் ஆண்டுதோறும் கடைபிடிக்கப்படுகிறது.

## புனித வெள்ளி அன்று செய்ய வேண்டியவை:

- புனித வெள்ளி அன்று அதிகாலையில் எழுந்து, இயேசு கிறிஸ்துவின் தியாகத்தை போற்ற தயாராக வேண்டும்.
- அன்று கருப்பு நிற ஆடை அணிந்து, மௌனம் அனுஷ்டிக்க வேண்டும்.
- இது துக்கம் அனுஷ்டிக்க வேண்டிய நாள் என்பதால் தொலைக்காட்சி, மொபைல் போன்கள், சமூக வலைதளங்கள் போன்றவற்றை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.
- தேவாலய நடைமுறைக்கு ஏற்ப உண்ணாவிரதம், மதுவிலக்கு ஆகியவற்றை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும்.
- புனித வெள்ளி பிரார்த்தனை, சேவையில் கலந்து கொள்ள வேண்டும். பகல் 3 மணி வரை மௌனத்தை கடைபிடிக்க வேண்டும்.
- வீடு அல்லது தேவாலயத்திற்கு சென்று புனிதமான சிலுவையை வணங்க வேண்டும்.

நற்செயல்கள் புரிந்து, சிலுவை மரணத்தைச் சந்தித்து, மனிதகுலத்துக்காக, இயேசுநாதர் பாவமன்னிப்பை பெற்ற நாளே பெரிய வெள்ளி தினமாகும். எனவே, பெரிய வெள்ளிக் கிழமையில் நம்மை நாம் திரும்பிப் பார்த்து, நமது பாவங்களை, நம் தீய சிந்தனைகளை இயேசுவின் சிலுவையில் அறைந்து, அவரை அடக்கம் செய்யும் கல்லறையிலேயே நாமும் அவற்றை அடக்கம் செய்வோம். உயிர்ப்புப் பெருவிழா எங்கள் வாழ்க்கையில் புதிய உயிர்ப்பைப் பெற்றுத்தரும்.

# The Colombo Border நிர்மாணத்துக்கு அடிக்கல்



*Prime Lands Residencies PLC*, தனது புதிய நிர்மாணத் திட்டமான *'The Colombo Border'* இன் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை, நிர்மாணத்துறையில் புகழ்பெற்ற நாமமான *Sanken Construction (Pvt) Ltd* க்கு வழங்கியுள்ளதாக அறிவித்துள்ளது. 1984ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட *Sanken*, நிர்மாணத்துறையில் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனங்களில் ஒன்றாக திகழ்கின்றது.

சொகுசான வதிவிட ரியல் எஸ்டேட் பகுதியில் 2 மற்றும் 3 படுக்கை அறைகளைக் கொண்ட தொடர்மனைகளுடன், வரையறுக்கப்பட்ட 4 படுக்கை அறைகளைக் கொண்ட *duplex penthouses* களும் அடங்கியிருக்கும். வதிவோர் இளம் தொழில்நிபுணர்களின் வாழ்க்கைமுறைகளுக்கு பொருத்தமான நவீன அலங்காரம், உலகத் தரம் வாய்ந்த வசதிகள் மற்றும் நவீன கட்டடக்கலை அம்சங்கள் போன்றவற்றை எதிர்பார்க்கலாம். வதிவிடத் தொகுதியில் 3 கோபுரங்கள் அமைந்துள்ளன. அதில் *Brielle* டவரை *Sanken Construction* நிர்மாணிக்கும்.

6 காணிப் பகுதியில் அமையவுள்ள இந்தத் திட்டத்தில் 5 ஏக்கர் பரப்பளவிலான பசுமையான திறந்த வெளிகள் அமைந்துள்ளதால், வசிப்போருக்கு நவீன வசிப்பதற்கான சௌகரியங்கள், இயற்கையுடன் இணைந்து வழங்கப்பட உள்ளன.


நிர்மாணத்துறையில் *Sanken Construction* பெருமளவு அனுபவத்தையும், உறுதியான கீர்த்தி நாமத்தையும் கொண்டுள்ளது. பாரிய சொகுசு அபிவிருத்தித் திட்டங்களை கையாண்ட அனுபவத்தையும் பெற்றுள்ளது. தரம் மற்றும் சிறப்பு போன்றவற்றுக்கான தனது அர்ப்பணிப்புக்காக அறியப்படும் *Sanken*, சிறந்த பகுதிகளுக்கான *Prime Residencies* இன் நோக்குடன் பொருந்தும் பல திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளது.

*Prime Lands Residencies PLC* இன் தலைமை அதிகாரி சந்தமினி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "*The Colombo Border* திட்டத்துக்காக *Sanken Construction* ஐ தெரிவு செய்கையில், உயர் நியமங்கள் மற்றும் சிறப்பு எனும் எமது நோக்குடன் பொருந்தும் ஒரு பங்காளரை நாம் எதிர்பார்த்தோம். தரம் மற்றும் நுணுக்கம் ஆகியவற்றில் *Sanken* கொண்டுள்ள கீர்த்தி நாமமானது, *The Colombo Border* திட்டம், வசிப்போருக்கு பிரத்தியேகமான அனுபவத்துடன், நவீன சௌகரியங்கள் நிறைந்த புதிய சொகுசு வாழிட அனுபவத்தை பெற்றுக் கொடுத்து அதற்கான புதிய கருதுகோளாக அமையும் எனும் உறுதியை எமக்கு வழங்கியிருந்தது" என்றார்.

*Sanken Construction (Pvt) Ltd*இன் முகாமைத்துவ பணிப்பாளர் பொறியியலாளர் மேஜர். ரஞ்சித் குணதிலக குறிப்பிடுகையில், "*The Colombo Border* திட்டத்துக்காக *Prime Lands Residencies* உடன் நாம் கைகோர்த்துள்ளதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். ஒவ்வொரு செயற்திட்டத்தினதும் எதிர்பார்ப்பை விஞ்சி செயலாற்றுவதற்கு *Sanken*ஐச் சேர்ந்த நாம் எதிர்பார்க்கின்றோம். இந்த அபிவிருத்தித் திட்டத்தில் எமது நிபுணத்துவத்தை உள்வாங்கி, கொழும்பு நகரக் கட்டமைப்பில் மற்றுமொரு முக்கியமான உள்ளம்சத்தை சேர்க்க எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

இந்தத் திட்டத்துக்கான பைலிங் வேலைகள் தற்போது பூர்த்தியடைந்துள்ள நிலையில், பிரதான கட்டுமானப் பணிகள் விரைவாக முன்னேறி, 2027 ஆம் ஆண்டில் *The Colombo Border* கொழும்பில் பிரமாண்டமாக வெளிவரும்.

# கொமர்ஷல் வங்கி வாகன லீசிங் ஊக்குவிப்புத் திட்டம் அறிமுகம்



வாகனங்களை கொள்வனவு செய்யவுள்ளவர்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் வரையறுக்கப்பட்ட காலத்திற்கு கவர்ச்சிகரமான லீசிங் திட்டம் மூலம் ஆதரிப்பதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

2025 மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெறப்படும் லீசிங் வசதிகளுக்கு, சிறப்பு வட்டி வீதங்கள், தனிப்பயனாக்கப்பட்ட கட்டணத் திட்டங்கள், முதல் ஆண்டு காப்புறுதி கட்டணங்களில் கழிவு, கடன் கடிதங்கள் திறக்கப்படும்போது குறைந்தபட்சம் ரூ.10,000 தரகு கட்டணத்தில் 50% கழிவு, இணைவு கட்டணத்துடன் முதல் ஆண்டு வருடாந்த கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்ட இலவச கடனட்டை ஆகியவற்றை வழங்கவுள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் இந்த வாடிக்கையாளர்களுக்கு லீசிங் வசதிகளுக்கான விரைவான மற்றும் தொந்தரவு இல்லாத ஒப்புதல் மற்றும் வாகன உதிரி பாகங்களுக்கு சிறப்பு விலைக்கழிவுகள் ஆகியவை இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும் என்று வங்கி தெரிவித்துள்ளது. பதிவு செய்யப்படாத வாகனங்களின் லீசிங் வசதிகளுக்கு இந்த சிறப்பு சலுகைகள் பொருந்தும்.

கொமர்ஷல் வங்கியானது, வாகன குத்தகைகளில் மிகக் குறைந்த வாடகையாக அதாவது ஒவ்வொரு ரூ.100,000க்கும் ரூ.1,598 என்ற ரீதியில் 7 வருடங்களுக்கு இந்த லீசிங் வசதியை வழங்குகிறது.

கொமர்ஷல் வங்கியின் சூப்பர் லீசிங் மற்றும் ஹைப்ரிட் லீசிங் போன்ற லீசிங் வசதிகள் மூலம், தனிப்பட்ட வருமான முறைகளுக்கு ஏற்றவாறு தனிப்பயனாக்கப்பட்ட லீசிங் தெரிவுகளை கொமர்ஷல் வங்கி லீசிங் வாடிக்கையாளர்கள் பெற முடியும்.

கொமர்ஷல் வங்கியானது உலகின் தலைசிறந்த 1,000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட முதலாவது இலங்கை வங்கியாகும். மற்றும் கொழும்பு பங்குச் சந்தையில் (CSE) வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. கொமர்ஷல் வங்கியானது இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (SME) துறைக்கு மிகப்பெரிய கடனுதவி வழங்குவதோடு, டிஜிட்டல் கண்டுபிடிப்புகளில் முன்னணியில் உள்ளது. அத்துடன் இலங்கையின் முதலாவது 100% கார்பன் நடுநிலை வங்கியாகும். கொமர்ஷல் வங்கியானது நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கிளைகள் மற்றும் தானியங்கி இயந்திரங்களின் வலையமைப்பைச் செயல்படுத்துகிறது, மேலும் இலங்கை வங்கிகளுக்கிடையில் பரந்த சர்வதேச தடத்தைக் கொண்டுள்ளது, பங்களாதேஷில் 20 நிலையங்கள், மியன்மாரில் ஒரு நுண்நிதி நிறுவனம் மற்றும் மாலைத்தீவில் பெரும்பான்மையுடன் கூடிய முழு அளவிலான Tier I வங்கி ஆகியவற்றை கொண்டு திகழ்கிறது. வங்கியின் முழு உரித்தான துணை நிறுவனமாக CBC ஃபினான்ஸ் லிமிடெட் திகழ்கிறது. வங்கியானது அதன் சொந்த கிளை வலையமைப்பு மூலம் பரந்த அளவிலான நிதிச் சேவைகளையும் வழங்குகிறது.

# உணர்வுகள்



ஒரு சின்ன நிசப்தத்தின்
பெரு வெளியை
நகர்த்த நிமிரும்
நாக்கிளியின்
உட் தெம்பு..!

தொட்டச்சுருங்கியின்
நரம்புகளில்
ஒட்டிக்கிடக்கும்
நாணம்..!

சிதிலமாகும்
மின்காந்தப் பாதைகளில்
தெருக் கூத்தாடும்
பரிசுத்த உணர்வொன்று
ஆவிகளின்
அரை நெருக்கத்தில்
தள்ளாடித் தள்ளாடிக்
கொப்பளிக்கும்
மறைவெப்பத்தை
உடல் நிறைக்கும்..!

பெரும் சுனாமி தாங்கும்
விழி மடல்கள்.
சொல்லவந்ததைச்
சொல்லிமுடித்ததாய்
மாய நிஜங்களாகும்..!

பெண்ணெனும்
அமிலத்தில் விழுந்த
காதலெனும்
காரத்துளி..!

கொட்டிய ஆரன்–



இ.ஜிவிஷா கிளிநொச்சி

# பத்து வயது ஞாபகம்

பத்து வயதனிலே
பயங்கரவாத பிரச்சினையைப்
பார்த்த ஞாபகம்..!

பக்குவப்படாத வயதினிலே
புலம்பெயர்ந்து சென்ற ஞாபகம்..!

பத்திரமாய் இருப்பதற்கு
பதுங்கு குழியில் இருந்த ஞாபகம்..!

புசியைப் போக்குவதற்காகப்
பச்சையரிசிக் கஞ்சி குடித்த ஞாபகம்..!

பள்ளிப்பை சுமக்கும் வயதில்
பயத்தினைச் சுமந்த ஞாபகம்..!

பயங்கரவாதப் பிரச்சினையில்
பயங்கரமாய் கிடந்த உடல்களின் ஞாபகம்..!

பாவத்திற்கு மிஞ்சிய உயிர்களை
படையினர் முகாம்களிற்கு ஏற்றிய ஞாபகம்
பத்து வயதினிலே..!

# இடதுசாரி

மணல் வெளியில்
புதைந்து கிடக்கின்றன
ஆயிரம் ஆயிரம்
கால் தடங்கள்

ஒவ்வொன்றிலும்
பாதம்
பதிக்க முனைகிறேன்
ஒன்றிலாவது
பொருந்தி விடும்
என்ற ஆசையில்

ஆனாலும்
எதுவும்
பொருந்துவதாயில்லை

கால்களுக்கு பதில்
தலை
துண்டிக்கப்பட்ட இருக்கலாம்
என்கிறது வலதுசாரி
மனம்

நானோ இப்போதும்
இடதுசாரி தான்..!



சிட்டு



# வெய்யில் நிறச் சொற்கள்

இனி சொற்களில்
குளிர்மை அற்றுப் போகலாம்
சுட்டெரிக்கும் வெய்யிலின் வெக்கை அதற்கும்
காரணமின்றி வருகிற
கோபத்தைக் கட்டுப்படுத்துவதற்கு
நிதானத்தை சேகரிக்க
பக்குவப்பட வேண்டும் மனசு..!

பொல்லாத மனசு
காலநிலை மாறினாலும்
மாறித் தொலைக்கிறது..!


ஆயினும்,
மூப்படையும் வயது
என்றென்றும் தொடர் வேலை
வலிகளை உணரும் உடல்
இன்னும்
இன்னுமாய்...
நிதானத்தைக் கொல்லும்
ராட்சத விலங்குகளாய்
பல கண்முன்னே
துளியாவது
மழை வரும் சாத்தியம் பற்றி
முகில்கள் கூடிப் பேசவில்லை
இளம் தென்றல்
உடலை முத்தமிட்டுச்
செல்லவில்லை..!

கோடையின் குதூகலம் மட்டும்
பளிச்சென்ற வானத்துக்கு
தொண்டை வறளும் இக்கணம்
வானவில் வண்ணங்களில்
பருகும் குளிர்பான மிடறுகளால்
வெய்யில் ஒருநாளும்
குறைவடையப் போவதுமில்லை..!

சொற்கள் இனி வெய்யிலின்
நிறத்தைப் பூசிக் கொள்ளும்.

பாலையூற்று
அஷ்ரபா நூர்தீன்





அமெரிக்கா

அமெரிக்க தூதரகங்கள் பலவற்றுக்கு

# விரைவில் பூட்டு?

அமெரிக்க அரசாங்கத்தின் தேவையற்ற செலவுக் குறைப்புகளைக் கருத்தில் கொண்டு, சுமார் 30 நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் மற்றும் கொன்ஸ்லேட் பிரிவுகளை மூடுவது குறித்து, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கவனம் செலுத்தியுள்ளதாக, வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதில் ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவில் உள்ள நாடுகளில் உள்ள தூதரகங்கள் மற்றும் கொன்ஸ்லேட் பிரிவுகள் அடங்குவதாகவும் இதன்படி, சோமாலியா, ஈராக், மால்டா, லக்சம்பர்க், காங்கோ, மத்திய ஆபிரிக்க குடியரசு, தெற்கு சூடான் போன்ற நாடுகள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும், பிரான்சில் உள்ள ஐந்து அமெரிக்கத் தூதரகங்களையும் மூடுவதற்கான திட்டங்கள் உள்ளதாகவும் இதற்கு மேலதிகமாக, ஜெர்மனி மற்றும் போஸ்னியாவில் உள்ள இரண்டு தூதரகங்களை மூடுவதிலும் அமெரிக்கா கவனம் செலுத்தியுள்ளது.



கொங்கோ


## படகு விபத்தில் 50 பேர் பலி

கொங்கோவில் இடம்பெற்ற படகு விபத்தில் 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடமேற்கு கொங்கோவில் உள்ள மடான் குமு துறைமுக பகுதியில் இருந்து, செவ்வாய்க்கிழமை (15) இரவு, போலோம்பா பகுதிக்கு ஒரு மோட்டார் படகு புறப்பட்டுள்ளது. அந்தப் படகில் சுமார் 400 பேர் பயணம் செய்தனர். பன்டாக்கா பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, திடீரென படகில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

உயிர் தப்பிப்பதற்காக படகில் இருந்தவர்கள் ஆற்றில் குதித்துள்ளனர். இந்தக் கோர விபத்தில் படகிலிருந்து 50 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆவர். சுமார் 100 பேர் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டனர். காணாமல் போன மற்றவர்களை தேடும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டனர்.

படகு தீப்பிடித்த விபத்துக்கு பெண் ஒருவர் சமையல் செய்ததே காரணம் என கூறப்படுகிறது.



நைஜீரியா

## எறும்புகளை கடத்திய சிறுவர்கள் கைது

நைஜீரியாவில், சுமார் 5,000 அரியவகை எறும்புகளுடன் இரண்டு சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நைஜீரியாவில் உள்ள காடுகளில் பல்வேறு விதமான அரிய வகை பறவைகள், பூச்சி இனங்கள், மிருகங்கள் உள்ளன. இந்த நிலையில், வனப்பகுதியில் வாழும் அரிய வகை பூச்சியினங்கள் தொடர்ந்து கடத்தப்படுவதாக வனத்துறையினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதன்பேரில் நைரோபியில், வெளிநாட்டினர் தங்கும் வணிக விடுதிகளில் பொலிஸாருடன் இணைந்து வனத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். அப்போது ஹோட்டல் அறையில் 'டெஸ்ட் டியூப்'களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த எறும்புகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு சோதனை குழாயில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 5,000 அரியவகை எறும்புகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து, பெல்ஜியம் நாட்டை சேர்ந்த 2 சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இது குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



இந்தியா

உலகின் செல்வாக்கு மிகுந்தவர்கள் பட்டியலில்

## இந்தியர்களுக்கு இடம் இல்லை

சர்வதேச அளவில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள், ஏற்படுத்தக் கூடியவர்கள், பிரபலங்கள் என டாப் 100 பேரை ஒவ்வொரு ஆண்டும் பிரபல ஆங்கிலப் பத்திரிக்கையான டைம் மேகசின் வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டிற்கான பட்டியல் வெளியாகியுள்ளது. இதில், 2025ஆம் ஆண்டுக்கான உலகின் செல்வாக்கு மிகுந்த தலைவர்கள் பட்டியலில் இந்தியர்கள் யாரும் இடம்பெறவில்லை.

இந்த பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், முகம்மது யூனுஸ், டெஸ்லா நிறுவன சி இ ஓ எலான் மஸ்க் உள்ளிட்டவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு இந்தியாவை சேர்ந்த மல்யுத்த வீராங்கனை ஷாக்சி மாலிக், பொலிவூட் நடிகர் ஆலியா பட் உள்ளிட்டவர்கள் இடம்பெற்று இருந்த நிலையில், இந்த ஆண்டில் யாரும் இடம்பெறவில்லை.

தமிழ்நாடு

பதாதையால்

## கூட்டணிகளிடையே பரபரப்பு




தமிழக சட்டசபைத் தேர்தல் அடுத்த ஆண்டு (2026) நடைபெறவுள்ளது. சட்டசபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கான வியூகங்களைத் தமிழக அரசியல் கட்சிகள் முழுவீச்சில் தொடங்கி விட்டன. ஆளும் கட்சியான திமுக சட்டசபைத் தேர்தல் பணியைத் தொடங்கி விட்டது. பிரதான எதிர்க்கட்சியான அதிமுகவும் கட்சி பணிகளையும் முடுக்கிவிட்டுள்ளது. புதிதாகக் கட்சி தொடங்கியுள்ள நடிகர் விஜய்யும், அதேபோல் நாம் தமிழர் கட்சியும் தேர்தல் பணிகளைத் தொடங்கியுள்ளனர்.

இதற்கிடையில், வருகிற சட்டசபைத் தேர்தலில் அதிமுக - பாஜக கூட்டணி அமைத்துப் போட்டியிடும் சென்னையில் மத்திய அமைச்சர் அமித்ஷா அண்மையில் அறிவித்தார்.

மேலும், எடப்பாடி பழனிசாமி தலைமையில் தேர்தலைச் சந்திப்போம் என்றும் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி அமையும் என்றும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து திமுகவை வீழ்த்தவே பாஜகவுடன் கைகோர்த்தோம் என்றும் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்பது இல்லை என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாகத் தெரிவித்தார். இது அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், பாஜக மாநில தலைவராகப் பொறுப்பேற்றுள்ள நயினார் நாகேந்திரனுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் செட்டிக்குளம் ஊராட்சி மன்ற தலைவர் அம்மா. எஸ்.செல்வகுமார் பெயரில் நெல்லையில் பல்வேறு இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

அதில், "பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவராக பொறுப்பேற்றுள்ள 'வருங்கால முதல்வரே!' வாழ்த்துகிறேன்" என்ற வாசகங்கள் இடம்பெற்றுள்ளன.

இது அதிமுக-பாஜக கூட்டணி இடையே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.



சம்பியன்ஸ் லீக்:

# வெளியேற்றப்பட்ட நடப்புச் சம்பியன்கள்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரிலிருந்து நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் வெளியேற்றப்பட்டுள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலிடம் காலிறுதிப் போட்டியில் தோற்றே தொடரிலிருந்து ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஆர்சனலின் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் தோற்ற மட்ரிட், தமது மைதானத்தில் வியாழக்கிழமை (17) அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியிலும் 1-2 என்ற கோல் கணக்கில் தோற்று 1-5 என்ற மொத்த கோல் கணக்கின் அடிப்படையிலேயே தொடரிலிருந்து வெளியேறியது.

ஆர்சனல் சார்பாக புகாயோ ஸாகா, கப்ரியல் மார்டினெல்லி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை வினிஷியஸ் ஜூனியர் பெற்றிருந்தார்.

இதேவேளை இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனிடம் தோற்று ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சும் தொடரிலிருந்து வெளியேறியுள்ளது.

தமது மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போடியில் 1-2 என்ற கோல் கணக்கில் தோற்ற மியூனிச், இன்டரின் மைதானத்தில் நடைபெற்ற போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் சமப்படுத்திய நிலையில், 3-4 என்ற மொத்த கோல் கணக்கிலேயே மியூனிச் தொடரிலிருந்து வெளியேறியது.

மியூனிச் சார்பாக ஹரி கேன், எரிக் டயர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். இன்டர் சார்பாக, லொட்டரோ மார்டினெஸ், பெஞ்சமின் பவார்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

தமிழ் புத்தாண்டுத் தொடரில்

## வெற்றிவாகை சூடிய வட்டுவாகல் உதயசூரியன்



விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுமதியுடன் வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட தமிழ்ப் புத்தாண்டு கால்பந்தாட்டத் தொடரில் வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக் கழகமானது சம்பியனாக வெற்றிவாகை சூடியது.

செந்தமிழ் விளையாட்டுக் கழக மைதானத்தில் செவ்வாய்க்கிழமை(15) நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை வென்றே உதயசூரியன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

இப்போட்டியின் வழமையான நேர முடிவு வரையில் இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாத நிலையில், 5-4 என்ற ரீதியில் பெனால்டியில் வென்றே உதையசூரியன் சம்பியனாகியது.

இறுதிப் போட்டியின் நாயகனாக சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் டயான்சனும், தொடரின் நாயகனாக உதயசூரியனின் சி.இன்சாத்தும், சிறந்த கோல் காப்பாளராக உதயசூரியனின் பு.அஜித்தும் தெரிவாகினர். தொடரின் மக்கள் மனம்கவர் வீரராக பு.அபிசன் தெரிவானதோடு, தொடரின் சிறந்த அணியாக மாத்தளன் ஒற்றுமை விளையாட்டுக் கழகம் தெரிவானது.



## அத்லெட்டிகோவிலேயே தொடரப் போகும் கிறீஸ்மன்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டின் முன்களவீரரான அந்தோனி கிறீஸ்மன் ஐக்கிய அமெரிக்காவுக்கு செல்வாரெனக் கூறப்பட்ட நிலையில், எதிர்வரும் 2027ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் அத்லெட்டிகோவுடனான தனது ஒப்பந்தத்தை நீடிப்பாரெனக் தெரிவிக்கப்படுகிறது.

அத்லெட்டிகோவுடனான 34 வயதான கிறீஸ்மன்னின் ஒப்பந்தமானது அடுத்த 2026ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

நீர்கொழும்பு மூவர்ஸ் கிரிக்கெட் கழகத் தொடர்:

## கிண்ணத்தை சுவீகரித்த வயம்ப டஸ்கர்ஸ்



எம்.யூ.எம்.சனூன்

நீர்கொழும்பு மூவர்ஸ் கிரிக்கெட் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 100 பந்துகள் கொண்ட கடினப்பந்து கிரிக்கெட் தொடரில் சம்பியனான வயம்ப டஸ்கர்ஸ் கிரிக்கெட் கழகம் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

திம்பிரிகஸ்கொட்டுவவிலுள்ள மேரிஸ்டெலா கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற 12 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் கொழும்பு நேட்டிவ் கிரிக்கெட் கழகத்தை வென்றே குருநாகலின் வயம்ப டஸ்கர்ஸ் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வயம்ப டஸ்கர்ஸ், 100 பந்துகளில் 8 விக்கெட்டுகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 132 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நேட்டிவ் 100 பந்துகளில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 15 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

சம்பியனான டஸ்கர்ஸுக்கு 250,000 ரூபாய் பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது.

இறுதிப் போட்டியில் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் டஸ்கர்ஸின் முஸர்ரஃப் தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 18, ஏப்ரல் 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.